அபிநயப் பாட்டும் கதையும்

(III, IV வகுப்புகளுக்கு)

3364

BY

V. RAMUDOO IYER

ASSISTANT, E. R. HIGH SCHOOL

TRICHINOPOLY

2554

PRINTED AT

THE IMPERIAL PRESS

TRICHY.

—

Copyright Reserved] 1936 [விலை அணா 2½.

8

அபிநயப் பாட்டும் கதையும்

(III, IV வகுப்புகளுக்கு)

22554
2616
894.8111

BY

V. RAMUDOO IYER
ASSISTANT, E. R. HIGH SCHOOL
TRICHINOPOLY

PRINTED AT
THE IMPERIAL PRESS
TRICHY

Copyright Reserved] 1936 [விலை அணா 2½.

DEDICATED TO

MY GURU SWAMY.

SOME SELECT OPINIONS.

Trichinopoly,
27—11—1935.

I have very great pleasure in introducing this booklet to that large body of teachers whose privilage it is to lay the foundations of our country's education. The author belongs to the staff of a growing institution in the town and is imbued with a genuine desire to do his bit in serving his community. He fully realises the truth that song and play are children's delights and so has set to himself the task of catering to their needs. The booklet is a collection of action songs and a few devotional hymns. The language is fairly simple and the tunes are popular. I have great hopes that the elementary school teacher will find what he needs in this book and will encourage my friend the author to attempt greater things in the near feature.

(Sd.) R. LAKSHMINARASIMHAN M.A., L.T.,
Government Training School, Trichinopoly.

"அபிநயப்பாட்டும் கதையும்" என்ற நூலில் உள்ள சில பகுதிகளை ஸ்ரீமான் V. ராமுடு அய்யரவர்கள் பாடக்கேட்டு இன்புற்றேன். ஸ்ரீமான் ஐயரவர்கள் நீண்டகாலமாய்ப் பாலருக்குப் போதித்தலையும் அவர்களை நன்முறையில் பயிற்றலையுமே தம்முடைய கடமையாகவும் கோட்பாடாகவும் கொண்டுள்ளார். அவர்களுடைய ஆன்ற அனுபவமும் நிரம்பிய அறிவும் பொருந்துமாறு பாலர்களுக்கு ஏற்ற முறையில் இந்நூலை அமைத்துள்ளார்.

நம் நாட்டுப் பாலர்களின் முன்னேற்றத்தில் நாட்டமுடைய ஆசிரியர்கள் இந்நூலை ஆர்வத்துடன் ஏற்று மாணவர்க்குப் பயன் படுத்தி, இந்நூலாசிரியர்க்கு மேன் மேலும் ஊக்கம் அளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

திரிசிரபுரம்
30—12—35

(Sd). மு. நடேச முதலியார்.
Lecturer in Tamil,
St. Joseph's College, Trichinopoly.

Teppakulam, Trichinopoly.
27—12—35.

இனிய எடுப்பான பாடல்களின்மூலம் போதனைசெய்வது, அப்பாடங்கள் பாலர் மனதில் ஆழ்ந்து பதிவதற்கு ஏதுவாகும் என்பது ஆசிரிய உலகம் அறிந்த ஒரு உண்மை ஆகும். எவ்வளவுக் கெவ்வளவு அழகான மெட்டுக்களில் அப்பாட்டுகள் அமைகின் றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவை கற்பதற்கு எளியவையாகவும், பிரியமானவையாகவும் ஆகும். இந்த அடிப்படையான கொள்கை யைக் கொண்டே நமது நண்பர், ஸ்ரீமான் வே. ராமுடு அய்யரவர்கள் இந்த அபிநயப்பாட்டும் கதையும் என்ற நூலை எழுதியிருக்கிறார்கள். நல்ல தமிழிலே, எளிய நடையிலே, அந்தமான சந்தத்திலே, சிறு வருக்கு உபயோகமாகும் பல நீதிகளையும் போதனைகளையும், இப் புத்தகத்தில் இவ்வாசிரியர் அமைத்திருக்கிறார். நம் நாட்டுச் சிறு வரின் கல்வி நலத்தைக் கருத்திற்கொண்ட அனைவரும், பெற்றோரும் பள்ளிக்கூட ஆசிரியரும் மற்றோரும் இவ்வழகிய நூலை ஆதரிக்கக் கடமைப்பட்டவர் ஆவர். இந்த நூதன முறையிலே, மேன்மேலும் பாட்டுகள் பொழிந்து, சிறுவர்க்குப் பயன்படும்படிச் செய்யுமாறு இவ்வாசிரியருக்கு ஊக்கமும், ஊதியமும் அருளும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். சுபம்.

(Sd.) ரா. வாசுதேவசர்மா M.A., B.L.,
Senior Lecturer in Sanskrit & Superintendent of Studies in Indian Languages.
National College, Trichinopoly and Member
Comite Consultatif de Jurisprudence Indienne,
PONDICHERRY (FR. INDIA.)

Vidwan M. Periasamy Pillai,
Senior Tamil Pandit,
E. R. High School.

"Sekkilar Tamilagam"
West Chinthamoni,
Teppakulam P.O.
Trichinopoly 1—1—36.

இளஞ்சிறுர்க்கு நீதி, சுகவழி முதலியன போதித்தற்குக் கதைகள் சிறந்த கருவியாகும். அக்கதைகளும் இனிய சந்தம் அமைந்த பாட்டில் அபிநயத்துடன் கூறப்படின், சிறுவர்கள் மிகுந்த ஆவலுடனும் மனக்கிளர்ச்சியுடனும் கேட்டு மகிழ்வார்கள். இக்கருத்தினை மனத்திற் கொண்டு, திருவாளர் V. ராமுடு அய்யர் அவர்கள் **"அபிநயப்பாட்டும் கதையும்"** என்னும் இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூலாசிரியர் இசைப்பாட்டை மெய்ப்பாடு தோன்றப் பாடும் ஆற்றல் நன்கு வாய்க்கப்பெற்றவர். இன்னும், சிறுவர்களுக்குப் பல ஆண்டுகளாகக் கல்வி பயிற்றி வருகின்றவர். ஆகையால், சிறுவர்களின் மனோபாவத்தை நன்கு அறிந்து அதற்கேற்ற வண்ணம் இந்நூலை யாத்துள்ளார் எனக் கூறுதல் மிகையன்று. ஆதலின், இந்நூல் இளைஞர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.
1—1—1936.

R. Nataraja Iyer, M.A., B L, L.T.,
Headmaster & Correspondent.

E. R. HIGH SCHOOL,
Teppakulam P.O.,
Trichinopoly 18-1-36.

I have great pleasure in recommending this booklet containing action songs and devotional hymns for introduction in the lower classes of Elementary Schools. They are written in simple, racy and lucid tamil and the tunes are popular. I am sure the booklet will be popular and will satisfy a long-felt want in the Teaching of action songs to children.

(Sd.) R. NATARAJA IYER,
Headmaster.

இவ்வுலகில் இசைக்கண் ஈடுபடாதாரில்லை. பசுவுஞ் சிசுவும் பசிய விடவரவும் இசையறியுமென்றே யிசைப்பர். இவ்வுண்மை யுணர்ந்தே திருச்சி இ. ஆர். உயர்தரப் பள்ளிக்கூட உதவி யாசிரியர் ஸ்ரீமான் இராமுடுவையர், சிறார் எளிதில் அறிந்து பயிலும் வண்ணம் இனிய சந்தங்களில் தற்காலத்துக்கேற்ற இராக அமைப்புக்களுடன் அபிநயப் பாடல்க ளியற்றியுள்ளார். நல்ல நீதிகளையுஞ் சிறந்த பொருள்களையும் பாலர்க்குப் போதிப்பதற்கு இத்தகைய பாடல்கள் சாலச் சிறந்தனவாகும். பாலர் மனப்பாங்கை யறிந்து பயிற்றுவிக்கும் சிலர் குழாத்தொருவராகிய இவர் இயற்றியுள்ள பாடல்களைப் பல சிறுவர்களும் சிறுமிகளும் பயின்று பயனடையுமாறு, கலாசாலை யதிகாரிகளும் சோதனை அதிகாரிகளும் பெரிதும் ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

நீதி செறிந்து நிலவுஞ் சிறுகதைகள்
ஓதிச் சிறார்க ளுளமுவந்து—கோதிலா
ஆட லுடன்பயில வன்போ டிசைத்தனனால்
பாடலினில் ராமுடுவென் பான்.

E. S. VARADARAJA IYER, B. A.,
Tamil Lecturer,
Annamalai University,
(Annamalai Nagar.)

Trichy,
5-1-36.

முகவுரை

இனிய ஸங்கீதமே அரிய பேரின்பம். கொடிய விடப் பாம்பும், பகையறியாப் பசுவும் சங்கீதத்தில் ஈடுபடுகின்றன வென்றால் மனித வர்க்கத்தைப்பற்றிக் கேட்பானேன்:

ஏற்றமிறைக்கும் குடியானவனும், சுண்ணும்பு குத்தும் கூலியாளும், தம் வேலையின் சிரமம் தெரியாமலிருக்கப் பாடிக்கொண்டே வேலைசெய்கின்றனர். அதிகம் சொல்வானேன்? சிறு குழந்தைகளுக்குப் பாட்டில் பரம ப்ரியம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. தொட்டிலில் படுத்திருக்கும் கிட்டுவும் பாட்டுப்பாடினால்தான் தூங்குகிறான்.

ஆகவே பாட்டுக்களின்மூலம் எந்தப் பாடத்தையும் (முதல் மூன்று வகுப்புக்களுக்கு—ஏன்- நான்காவது வகுப்புக்குங்கூடக்) கற்பிக்கலாம். இன்னும், முக்கியமாகக் கதைகளை, அவற்றின்மூலம் கற்பிப்பது சர்வ சுலபம். ஆதலால் "அபிநயப் பாட்டும், கதையும்," என்ற இந்தச் சிறு புத்தகம் மூன்றாவது நான்காவது வகுப்புக்களுக்கு உபயோகமாகும்படி எழுதப்பட்டிருக்கிறது.

இதில், ஒரு வருஷத்தில் கிரமமாக நடத்தக்கூடிய பத்துக் கதைகள் பாட்டுக்களாகவும், அவற்றின் பொழிப்பு வசனமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. சில ஸ்தோத்திரப் பாடல்களும், பெண்களுக்கு உபயோகமாகும் பொருட்டுச் சில கோலாட்டக் கும்மிப் பாட்டுக்களும், சுகாதாரப் பாட்டொன்றும், இராஜ வாழ்த்தொன்றும், ஆக மற்றும் ஏழு பாட்டுக்கள் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் நடை

யும், மெட்டுக்களும் எல்லோருக்கும் எளிதாயிருக்குமென்றே எண்ணுகின்றேன். எனவே, இச்சிறு புத்தகம் ஆரம்பப் பாடசாலைகளுக்கு நன்கு உபயோகமாகும் என்பது எனது நம்பிக்கை.

"இத்திரிச்சி ஜில்லாவில் 'அபிநயப்பாட்டும் கதையும்' எழுதும் ஆரம்ப ஆசிரியர் ஒருவரும் இல்லையோ?" என்று இங்ஙகர ஆரம்ப ஆசிரியர் சங்கத்திலிருந்து பிறந்த ஓர் குறையை நீக்கும்பொருட்டு, ஏதோ என் சிற்றறிவிற்கு எட்டியமட்டில் இச்சிறு புத்தகத்தை வெளியிடலானேன். இதில், நடையிலோ, இசையிலோ, மொழியிலோ அல்லது வேறெந்த வகையிலோ காணப்படுங் குற்றங்களை எடுத்துக்காட்டும் பெரியோர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தையளித்து அடுத்த பதிப்பில் அக்குறைகளை நீக்கிப் புத்தகத்தை வெளியிடுவேனென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாட்டுக்களைக் கவனம் செய்வதற்கு ஓர் ஊக்கத்தையளித்த எனது குருவுக்கும், இப்புத்தகத்திற்கு முன்னுரையளித்த பெரியார்களுக்கும், இதையச்சிட்டு வெளியாக்க ஓர் தைரியமளித்த ஆரம்ப ஆசிரியர் சங்கத்திற்கும், இதிலுள்ள விஷயங்களை அவ்வப்பொழுது பார்த்துத் திருத்திக்கொடுத்த எனது நண்பர் வித்வான். R. துரைசாமி அய்யர் (பிஷப் ஹீபர் கலாசாலை, திரிச்சிராப்பள்ளி) அவர்களுக்கும், மற்றும் இப்புத்தகத்தை ஆதரிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்,

ஆசிரியன்.

1. விநாயகர் துதி.

'ஸ்ரீதர முரஹரி' என்ற மெட்டு.

பல்லவி.

ஞான கணபதியை த்யானம் நாம் செய்குவோமே

அநுபல்லவி.

கான ரூபமாகவே ஆனந்த ரூபனை (ஞான)

சரணங்கள்.

1. அத்திமுகத்தோனை
சித்தியளிப்போனை
பத்தியுடன் பாதம்
நத்திப் பணிகுவோமே (ஞான)

2. அறிவோர் நிறைந்துள்ள
அரியதோர் அவனியில்
சிறியோம்செய் காரியம்
திருவுறச் செய்குவானே (ஞான)

2. ஸாஸ்வதி துதி.

ராகம் கம்பீரநாட்டை] [தாளம் ஆதி.

பல்லவி.

சரணம் ஸிரஸ்வதியே அயன் தேவியே

அனுபல்லவி.

சரணம் சரணமென்று
ஸிரஸ்வதியம்மை யின்று
கரங்களைக் கூப்பிஉந்தன்
வரந்தனைக் கோரிநின்றேம் (சரணம்)

சரணம்.

1. நான்முகன் தன் நாவில்
நன்து நாளும் வாழும்
தாயகியே வந்து
நல்துவாயே
நூன்முதலே பாவாய்
புன்முறுவல் பூப்பாய்
பன்முறையும் போற்றி நின்றேன்
அன்னையே வந்தருள்வாயே (சரணம்)

---

3. ஸுப்ரமண்யர் துதி - நாமாவளி.

'ராமசந்த்ர, ராமசந்த்ர, ராமசந்த்ர பாஹிமாம்' என்ற மெட்டு.

(கோலாட்டக் கும்மியாகவும் உபயோகிக்கலாம்.)

1. குன்றுலாவுங் குமரனே குணக்
குன்றே மால்மருகோனே!
அந்த மா மயில் மீதேறி
வந்தருள் என் ஐயனே!

2. முருகா நானு முந்தனை
புரிந்தே னனந்தம் வந்தனை
இன்றே வந்தருள்வா யெந்தாய்
கந்தா! உந்தன் மைந்தனே.

3. ஹராஹர ஹராஹரவென்று
அரன் குமரா உனைத் துதித்தேன்
சரவணபவ தருணமிதுவே
கருணைபுரியக் கடையேன்மேல்

4. வேல்தனைக்கொண்டு சூரனைக்கொன்ற
வேலனே ரண வீரனே
சூலிமால் மலரோன் முதலாய்ச்
சீலர் புகழும் சீரோனே!

5. தக்கதோர் விதமாய்த் தந்தை தனக்குத்
தத்துவஞ் சொன்ன குருமணியே
பக்குவமா யெந்தனிருளைப் போக்க
அக்கரை கொள்வா யருமணியே!

4. ஸ்ரீகிருஷ்ணன் துதி.

‘கோபிகளெல்லாம் கூடி’ என்ற மெட்டு.

கோலாட்டக் கும்மியாக உபயோகிக்க.

பல்லவி.

கூடுவோம் சிறுகூட்டம்—நாம்
ஆடுவோம் கோலாட்டம்

அநுபல்லவி.

பாடுவோம்பல பதங்களைத்தேடியே
பாலகோபால கிருஷ்ணன் பதந்தன்னை நாடியே (கூடு)

1. வேணு விலோலனை நாடி
விஜய கோபாலனைத் தேடி
வினைகளைத் தீர்க்கின்ற விமலனையேற்றிட
விதம்விதமாகவே விரைந்துபோற்றிட (கூடு)

2. பாண்டுவின் மருமகளாம்
பாண்டவர் தம்மனையாள்
வேண்டவந்தருள் தந்தமுகுந்தனை
ஈண்டுவந்தருள் தந்திட இந்த நாள் (கூடு)

3. கம்ஸன்முத லாய்க்கோடி
ஹிம்ஸைசெய் வோரைத்தேடி
த்வம்ஸம் செய்யவே தோன்றியருளிய
சிம்சுமாரனை ஸ்தோத்திரம் புரியவே (கூடு)

4. கரிதன்னைக் காத்திட்ட தேவா!
ஹரி எம்மைக் காத்திட வாவா
சரிவெண்ணெய் பால் தயிர் சரியாய்ப் படைத்திட
பரிவுடன் பாலனும் பார்த்துக் களித்திட (கூடு)

---

3. குரு துதி.

'திருப்புகழ்' மெட்டு.

1. பரம்பொருளதான அரும்பொருளைக்காண
குருவருளல்லாது வழியேது?
திருமறைகள் நான்கும் அறுபதுடன் நான்கு
உறுகலைகளோதிப் பயன் யாது?

2. பெருவிரலதோடு ஒருவிரலைக் கூட்டிப்
பெரும்பொருளைக் காட்டும் குருநாதா!
திருவருளதாலே உறுவினைப் போக்கிப்
பெருகொளியைக் கூட்டும் குருஸ்வாமீ!

இராஜ வாழ்த்துப் பாட்டு.

இங்கிலீஷ் நோட்டு மெட்டு.

வாழ்க வாழ்கவே   வாழ்க வாழ்கவே
வாழ்க நந்தம் ஜார்ஜ மன்னர் வாழ்க வாழ்கவே.

1. மன்னு யிர்தன்னைத்   தன்னு யிர்போல
எண்ணும் மன்னர் செங்கோலென்றும் மேன்மே
லோங்க வே (வாழ்க)

2. கல்வி வளரவே   செல்வம் நல்கிய
வள்ளல் ஜார்ஜும்   அன்னை மேரி ராணி யவர்க ளும்
(வாழ்க)

3. மானில மக்கள்   நம்மன்னன் மகிழ்வுற
மன்ன வன்பா லன்பு குன்ற தென்றும் ஓங்க வே (வாழ்க)

4. மாநிலவளம் மருவும்நீர்வளம்
தானி யங்க ளும்ம லிந்து தேசம் செழித்துமே (வாழ்க)

---

6. சுகாதாரப் பாட்டு.

'பாலாபிஷேகம்' என்ற மெட்டு.

(கும்மியாகவும் உபயோகிக்கலாம்.)

1. பாண்டமுருட்டியே பண்டத்தைப்பாழாக்கித்
தாண்டவமாடித் திரிந்து சென்று
யாண்டிருந்தோ ப்ளேகை யழைக்கும் எலிதன்னைக்
கூண்டிற் பிடித்துத் துரத்திடுவீர்.

2. காலில் பணிந்துபின் காதில் கீதம் பாடிக்
கோரிய தூக்கத்தைச் கெடுத்துமேநம்
கோதிலாத் தேகத்திற் கொடிய ஜுரம்புகக்
காணும் கொசுவைத் துரத்திடுவீர்.

3. தலைமயிர் தன்னையே தக்க சீப்புக்கொண்டுத்
தழைக்கும்படிச் சீவித் தலைமுடிப்பீர்
இலையேல் ஈர் பேனதால் இன்னல் செய் சிறங்கதால்
விளையும் அல்லல்பல உற்றிடுவீர்.

4. கட்டில் தொட்டில் பட்டு மெத்தை பட்டுக்துட்டை
இட்டமாகக் கட்டும் துணியதிலும்
மட்டின்றி மலிந்துமே கட்டந்தருகின்ற
துட்ட மூட்டைப்பூச்சியைத் தொலைப்பீர்.

5. அம்மை வராமலே இம்மையிற் சுகம்பெற
நம்மைக்காத்துக்கொளல் நன்மையன்றே!
அம்மை குத்துபவர் உம்மைத்துரத்தாமல்
பொம்மைபோல் நின்றம்மை வைத்துக்கொள்வீர்.

6. ஞாலம் புகழிந்தியா தேசந்தன்னிலும்
காலரா என்னுமோர் காலனுண்டோ!
பாலரும் யாவரும் பால் பழந் தின்பண்டம்
சாலச்சிறந்தவை கொள்ளுவீரே.

7. கந்தையானலும் கசக்கிக் கட்டிக்கொண்டுக்
கூழானலுங் குளித்துக் குடித்து
அந்தமான சுக ஆதார முறைகளை
எந்த நாளும் போற்றிப் பழகிடுவீர்.

கதை 1.

நரியும் திராக்ஷைக்குலையும்.

ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அது ஒருநாள் ஆகாரத்தின்பொருட்டுக் காடெங்கும் அலைந்து திரிந்தது. ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் ஒரு திராக்ஷைக்கொடியைக் கண்டது. அதில் குலைகுலையாகத் திராக்ஷைப் பழங்கள் உயரத்தில் தொங்கின.

நரி மிகுந்த சந்தோஷங்கொண்டு அதனடியிற் சென்றது. பழங்களைப்பார்க்க அதன் நாவில் ஜலம் ஊறிற்று. அவைகளைக் கௌவிப் பிடிக்கப் பலதடவை தாவிப்பார்த்தது. நரி கீழே விழுந்ததேயொழியப் பழம் ஒன்றுகூடக் கீழே விழவில்லை. தாவிக் குதித்ததாலும் பசியாலும் நரி மிக்க களைப்படைந்தது. முடிவில் அதிக மனவருத்தத்துடன் "சீச்சி! இந்தப் பழங்கள் கெட்டவை, புளிக்கும்" என்று சொல்லிக்கொண்டே ஓடிப் போயிற்று.

கிட்டாததற்காக ஒன்றைத் தூஷிக்காதே.

பாட்டு 1.

நரியும் திராக்ஷைக்குலையும்.

இங்கிலீஷ் நோட்டு மெட்டு.

1. பசியால் நொந்த நரியொன்று
திசைதிசைதோறும் திரிந்ததுவே
கனிகள் நிறைந்த வனமொன்றில்
கனிநிறை திராக்ஷை கண்டதுவே.

2. இனிதாய்த் தானும் அதை உண்ண
துணிந்து அவ்விடம் சென்றவுடன்
குனிந்து நிமிர்ந்து கூத்தாடி
நனிமிக வருந்திப் பார்த்ததுவே.

3. எட்டி எட்டிப் பார்த்தாலும்
கிட்டாதெனவே தானறிந்த
முட்டாள் நரியும் சினங்கொண்டு
கெட்டபழமென்றேடிற்றே.

4. இட்டமான பொருளொன்றைக்
கட்டப் பட்டு நாமடைய
பட்ட பாடு வீணுயின்
கெட்டதென்று கூறுவானேன்?

கதை 2.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

ஒரு ஆட்டுக்குட்டி ஓர் ஆற்றில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. தூரத்திலிருந்த ஓநாயொன்று அதைப் பார்த்தது. எப்படியாவது ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்னவேண்டும் என்று எண்ணியது.

ஆகவே ஓநாய் ஆட்டுக்குட்டிக்கு மேற்புறத்தில் ஆற்றில் தண்ணீர் குடிக்க இறங்கியது. பிறகு அது திடீரென ஆட்டைப் பார்த்து "ஏ! அற்பப் பயலே! நான் குடிக்கும் நீரை நீ ஏன் கலக்கிக்கெடுக்கிருய்?" என்றது. அதைக்கேட்ட ஆட்டுக்குட்டி திடுக்கிட்டுப் பயத்தினுல் சற்று ஒன்றும் பேசாமலிருந்தது. பிறகு ஒருவாறு தைரியங்கொண்டு "ஐயா! நான் உங்களுக்குக் கீழ்புறத்தில் நின்று ஜலங்குடிக்கிறேன், நீங்கள் குடித்த பின் கலங்கிய நீர் எனக்கு ஓடிவருமேயொழிய நான் கலக்கிய ஜலம் உங்களிடம் எப்படி வரும்? நீங்கள் சொல்வது நியாயமாக இல்லையே", என்றது.

உடனே ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்து "என்ன சொன்னாய்? அதிகப்ரசங்கி! நீதான் எனக்கு நியாயம் எடுத்துக் கூறவேண்டுமோ? மூடு உன் வாயை. அதுபோகட்டும். நீ என்னை ஆறு மாதத்திற்குமுன் வாயில்வந்தபடி வைதாயல்லவா?" என்றது.

இதைக்கேட்ட ஆட்டுக்குட்டி பயந்து நடுநடுங்கி "ஐயா! நான் பிறந்து இன்னும் நான்கு மாதங்கள்கூட ஆகவில்லையே. உங்களை ஆறு மாதத்திற்கு முன்பு நான் எப்படி வைதிருக்கக் கூடும். இது மிகவும் அசம்பாவிதமான வார்த்தை. தயவு செய்து என்மீது வீண் பழி சுமத்தாதீர்!" என்று விநயமாகத் தெரிவித்தது. இம்மாதிரி ஆட்டுக்குட்டி கூறியதைக்கேட்ட ஓநாய் "எப்படி இதைக் கொல்ல முயல்வது?" என்று சற்று யோசித்து, "அடே! போக்கிரிப்பயலே! என்ன அதிகமாகப் பேசுகிறாய்! நீ என்னை வைதிராவிட்டால் உன் தந்தை வைதிருப்பான். உன் தந்தை வைதாலென்ன! நீ வைதாலென்ன! இரண்டும் ஒன்றுதானே!. இதோபார்! உன்னை.................... ," என்று ஒரே பாய்ச்சலாக அந்த எளிய ஆட்டுக்குட்டியின்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றுவிட்டது.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு

பாட்டு 2.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

'இங்கிலீஷ் நோட்டு' மெட்டு.

1. ஓநாய் ஒருகாட்டோருபுறமாய்க்
காருறேன்றைக் கடுகிற்றே.
தான் தன் தாகம்தனைத் தீர்க்கத்
தானோர் புறமாய்த் தங்கிற்றே.

2. ஆங்கோ ராடும் அவசரமாய்த்
தாங்க வொண்ணுத் தாகம் கொண்டு
பாங்குடன் பல்கஜ தூரத்திலே
ஏங்கியே நீரைப் பருகையிலே

3. ஓநாய் :— சீச்சீ யாரடா சிறுபயலே!
ஆச்சுதா நீரை நீ கலக்கச்
சிறிதும் மனதில் பயமின்றிப்
பெரிதும் மமதை தான்கொண்டாய்

4. ஆ. குட்டி :— கொடிதிது தாமும் மேலிருக்க
அடியேன் நானுங் கீழிருக்க
முடியுமோ சொல்வீர் நான் கலக்க
முடியுமே நீரை நீர் கலக்க

5. ஓநாய் :— போதும் போதும் பிதற்றுதே
போதிது வந்தேன் பொறுபொறு நீ
பேதாய் மாதம் ஆறின்முன்
தீதாய் ஏன் என்னைத் தூற்றினுய்?

6. ஆ. குட்டி :— ஐயோ! நான்து மாதமும்
ஆயிற்றில்லை நான்பிறந்தே
ஆகவே உம்மைத் தூற்றிடவே
ஆதுமோ என்னுல் சாற்றிடுவீர்

7. ஓநாய் :— நன்று என்னை உன் தந்தை
அன்றேர் நாளில் வைதனனே
நன்றே சொல்வாய் அச்செய்கை
இன்றே கொன்றேன் உந்தனையே

8. துட்டர் தம்மைக் கண்டவுடன்
கிட்டி ஒன்றும் கூறமல்
எட்டி விலகிப் போவாரேல்
மட்டில் இன்பம் பெறுவாரே.

கதை 3.

காக்கையும் குடமும்.

கோடைக்காலத்தில் ஒருநாள், ஒரு காகம் இரை தேடித் திரிந்தது. அப்போது அதற்குத் தாகம் அதிகரித்தது. ஒரு வீட்டுத் தோட்டத்தில் ஒரு தண்ணீர்க்குடத்தைக் கண்டது. அதில் அடியில் சிறிது ஜலம் இருந்தது.

காகம் சந்தோஷங்கொண்டு அதன் வாயில் சென்று உட்கார்ந்தது. ஜலம் அடியில் இருந்ததால் காகத்தின் அலகுக்கு அது எட்டவில்லை. மிகவும் வருந்தி என்ன செய்வது என்று யோசித்தது.

முடிவில் ஓர் தீர்மானத்திற்குவந்தது. கீழே கிடந்த கூழாங்கற்களைத் தன் அலகினால் கொண்டுவந்து குடத்தில் போட்டது. கற்களைப் போடப்போட ஜலம் மேலே எழும்பிக் குடத்தின் வாய் மட்டத்திற்கு வந்தது. காகம் மிகவும் சந்தோஷத்துடன் ஜலத்தைச் சுலபமாகக்குடித்து தாகம் தீர்ந்தது. பலம்பெற்று ஆகாயத்தில் விர்ரென்று பறந்து போயிற்று.

புத்திமானே பலவான்.

பாட்டு 3.

காக்கையும் குடமும்.

கும்மி மெட்டு.

1. காகமொன்று கானிலெங்கும் அலைந்துதிரிந் துண்டு
தாகமதைத் தாங்கொணாது தண்ணீர்க்குடம் கண்டு

2. லாக்கவமா யதனைக்கிட்டி அடியில் ஜலம் கண்டு
தாகமது தீர்க்க வகையின்றித் துயர்கொண்டு

3. என்னசெய்வே னிந்தவேளை கண்ணெதிரே காணும்
நன்னீரிதைக் குடிக்கவே முடியவில்லை நானும்

4. என்று எண்ணி யோருபாயங் கண்ட காகம் தானும்
எண்ணிறந்த கற்களையே குடத்தினுள்ளே தானும்

5. ஜலமதிலே போட ஜலம் எழுவதையே கண்டு
அலகதினுலுண்டு தாகந் தீர்ந்து களிகொண்டு

6. பலாறியப் பறந்ததுவே பலம் மிகவே கொண்டு
நலம்பெறவே நடத்தல் நலம் சமயோசிதங்கண்டு.

கதை 4.

ஓநாயும் கொக்கும்.

ஒரு ஓநாய் ஒரு ஆட்டைக் கொன்று தின்றது. அப்பொழுது அதன் தொண்டையில் ஒரு எலும்பு சிக்கிக்கொண்டது. தன்னாலானமட்டும் அது அவ்வெலும்பை வெளியே எடுக்க முயன்றும் முடியாமல் மிகவும் வருந்தியது.

அப்போது அவ்வழியே ஓர் கொக்கு பறந்துவந்தது. அதைக்கண்ட ஓநாய் "ஐயா! கொக்காரே! தயவுசெய்து, என் தொண்டையிற் சிக்கியுள்ள எலும்பை உமது நீண்ட அலகால் வெளியே எடுத்துவிடுவீரா?" என்று கேட்டது. இதைக் கேட்ட கொக்கு "ஆஹா, அதற்கென்ன; அப்படியே செய்கிறேன். நீர் எனக்கு என்ன பிரதியுபகாரம் செய்வீர்?" என்று கேட்டது. உடனே ஓநாய் "நண்பரே! நீர் விரும்பியதைத் தருகிறேன்" என்றது.

கொக்கு, தான் வெகுமதி பெறப்போவதை எண்ணிச் சந்தோஷங்கொண்டு, தன் நீண்ட அலகை ஓநாயின் வாயிற் செலுத்தி வெகு சுலபமாக அவ்வெலும்பை வெளியே எடுத்து விட்டது. உடனே ஓநாயின் கஷ்டம் தீர்ந்தது.

பிறகு, கொக்கு தான் செய்த உதவிக்காகக் கைம்மாறை எதிர்பார்த்து நின்றது. அதைக்கண்ட ஓநாய் பரிஹாஸமாக "ஓய்! கோணக் கழுத்துக் கொக்காரே! உமக்கு வெகுமதி வேறேயா! பேஷ்! பேஷ்! உமது நீண்ட அலகு என் வாயில் இருந்தபோது உமது கழுத்தை அப்படியே துண்டாக்காமல் இருந்தேனே. அதுவே உமக்குப் பெரிய வெகுமதியல்லவா? வந்த வழியே திரும்பிப்பாராது போய்ச்சேரும்!" என்றது. கொக்கோ, வெட்கித் தலைகுனிந்து சென்றது.

துஷ்டர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது.

பாட்டு 4.

ஓநாயும் கொக்கும்.

நொண்டிச்சிந்து மெட்டு.

1. கானகத்தில் ஓநாயொன்று—அதுவும்
   கண்ட கண்ட பிராணிகளைக் கொன்று தின்னுமே

2. கண்டதோர் ஆடதனை—நன்கு
   கண்ட துண்ட மாகவேதான் கடித்துத்தின்ன

3. தொண்டையை அடைத்துக்கொண்ட—எலும்பொன்றைக்
   கண்டதனைத்தானும் எடுத்துவிட

4. மெள்ளப் பார்த்த ஓநாய்—அதை நீக்க
எள்ளளவும் முடியாமற் தொல்லை யடைந்து

5. பையவே அங்குச்சென்று—கொக்கொன்றை
கையைக் கொட்டிக் கண்ணைக்காட்டிக் கோரியழைத்து

6. கெட்டியாகத் தொண்டையிலே—சிக்கிக்கொண்ட
கட்டையெலும் பைக்கடி தெடுப்பீரென்று

7. கைகளைக் கூப்பித் தொழ—அக்காரியம்
கைக்கொள எண்ணி யந்தக் கொக்கு

8. கைம்மாறு கருதியதே—தன்னது
துன்பந் தீரின் வெகுமதி கொடுப்பதாக

9. ஓநாயும் வாக்களிக்கக்—கொக்கு
தானும் தன் நீண்டதோர் அலகினலே

10. கடுகியே கொத்தி எடுக்க—நன்கு
கட்டம் தீர்ந்த ஓநாயின் இட்டத்தைப்பெற

11. காத்து நின்ற கொக்கை நோக்கி—ஓநாயும்
கொக்கரித்துக் கையைக்கொட்டிக் கேலிசெய்து

12. நீண்ட மூக்குக் கொக்காரே!—நுந்தம்
நீண்ட மூக்கென் வாயிருக்கக் கண்ட யானும்

13. கண்டதுண்டம் செய்யாதிருக்க—நன்கு
கண்டதேஞர் கைம்மாறெனக் கருதா நீரும்

14. கடுகியே சென்றிடுவீர்—என்ந்
திடுக்கிட்டுக் கொக்கதுவும் வருந்தியதே

15. புல்லறிவாளருக்கு—நன்மை செய்தால்
அல்லல்தான் வந்துறுமென்னும் நீதி
நலமுற விளங்கிடுமே.

———

கதை 5.

பாம்பும் காகங்களும்.

ஒரு மரத்தில் ஆணும் பெண்ணுமாக இரண்டு காகங்கள் வசித்துவந்தன. ஒருசமயம் பெண் காகம் சில முட்டைக ளிட்டது. அவற்றைப் பத்திரமாகக் கூட்டில் வைத்துவிட்டு இரு காகங்களும் இரைதேட வெளியே சென்றன.

அம்மரத்தின் அடியில் ஒரு பொந்திருந்தது. அதில் ஒரு பாம்பு வசித்துவந்தது. அது, காகங்கள் வெளியே சென் றிருந்த சமயம், மரத்தின்மேலேறி அம்முட்டைகளை உடைத் துக் குடித்துவிட்டது. காகங்கள் திரும்பிவந்ததும் முட்டை களைக்காணாது வருந்தின.

மற்றொரு தடவை பெண் காகம் முட்டைகளிட்டது. வழக்கம்போல் அவை இரைதேட வெளியே சென்றன. பாம்பு, முன்போலவே அம்முட்டைகளையும் உடைத்துக் குடித்துவிட்டது. காகங்கள் இதையறிந்தன. பாம்பை ஒழிக்க வழிதேடின.

அவைகளுக்கு ஒரு நரி சிநேகமாக இருந்தது. தங்கள் சத்துருவைக்கொல்ல அதனோடு யோசனை செய்தன. முடிவில் ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்தன. அவ்வேற்பாட்டின்படி பெண் காகம் உடனே வெளியே பறந்துசென்று அவ்வூர் இராணி நீராடும் இடத்தையடைந்தது. அப்பொழுது இராணி, தான் அணிந்திருந்த மாலையொன்றைக் கழற்றி எதிரே ஆணியில் மாட்டிவிட்டுக் குளித்துக்கொண்டிருந்தாள். காகம் அம்மாலையை அலகால் கொத்திக்கொண்டு ஆகாயத்தில் பறந்துசென்றது. இதையறிந்த இராணி கூக்குரலிட்டாள்.

உடனே ஆட்கள் காகத்தைப் பின்தொடர்ந்தனர். காகம் அவர்கள் அறியும்படி மாலையைப் பாம்பிருந்த பொந்தில் போட்டது. ஆட்கள், மாலையையெடுப்பதற்காகக் கோடரி முதலியவற்றால் பொந்தைப்பிளந்தனர். அதனுள்ளிருந்த பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. அவர்கள் பாம்பைக் கொன்றுவிட்டு மாலையை எடுத்துச் சென்றனர். காகங்கள், தங்கள் விரோதி ஒழிந்ததைக் கண்டு சந்தோஷங்கொண்டன.

அபாயத்தை நீக்குவது உபாயமே.

பாட்டு 5.

பாம்பும் காகங்களும்.

'கோலேனுக்கோலே' என்ற மெட்டு.

1. அன்புள்ள இரு காகம்—மரத்தில்
நன்கொரு கூட்டினிலே
இன்பமாய் வாழும் நாளில்—இனம் வளர் முறையதால்
பெண் காகம் முட்டையிட

2. அந்த மரத்தடியில்—உள்ள
பொந்தில் வளரும் பாம்பு
அந்த இரண்டு காகம்—சொந்த இரைதேட
அந்தரம் சென்றபோது

3. சட்டென்று மாமேறி—காகம்
இட்டுள்ள முட்டைகளைப்
பட்டென்றுடைத்துமே—இட்டமுடன் குடித்து
விட்டிடும் ஒட்டையுமே

4. இதைக்கண்ட காகங்களும்—மனம்
பதைத்துமே தாளாது
இதற்கொரு வழிசெய்ய—இதங்கூறும் நரியுடன்
சதியோன்று ஆலோசித்து

5. அந்த ஊர் ராணியென்றும்—குளிக்கும்
சோந்த இடந்தனிலே
கந்தாத்தணிகின்ற—அந்தசாந்தன்னை
கண்முன்னே கழற்றிவைக்கக்

6. கண்டதும் பெண் காகம்—மூக்காற்
கொண்டு வேகமாய்ப் பறந்து
கொண்டதோர் கோபத்தால்—தண்டு தூரத்திவா
பொந்தினிற் போட்டதுவே

7. இடங்கண்ட வீரர்களும்—உடனே
கடுகியே கோடரியால்
அடிமாத்தைப் பிளக்க—விடப்பாம்பும் சீறிவா
அடித்ததைக் கொன்றுவிட்டுப்

8. பார்த்துமே பொந்தினுள்ளே—இராணியின்
பேரொளிர் முத்துமாலை
ஈர்த்தெடுத்துச்செல்லப்—பார்த்தந்த காகங்கள்
தீர்ந்தன சோகமது

9. காகங்களுக்குரைத்த—நரியின்
யூகந்தனைக்கொண்டு
ஆகுங்காரியங்களை—இலகுவாயுபாயத்தினால்
வேதுவிரைவில் முடிப்போம்

கதை 6.

குருவியும் குரங்குகளும்.

ஒரு நாள் மாலையில் சோ.........என்று மழை பெய்தது. சில குரங்குகள் மழையில் நனைந்து, தங்க இடமின்றித் தவித்தன. கடைசியில் ஒரு குன்றிமணி மரத்தடியில் வந்து சேர்ந்தன. குளிரால் அவற்றின் தேகம் குன்றின.

உடனே அங்குக் கீழே கிடந்த குன்றிமணிகளைப் பொறுக்கிக் குவித்தன. அவற்றின் நிறம் சிவப்பாயிருந்ததால் அவற்றைத் தீயென நினைத்தன. அத்தீயை வளர்த்துக் குளிர் காயலாம் என்று அம்மந்திகள் எண்ணின. ஆகவே எல்லாக் குரங்குகளும் வட்டமாக அக்குவியலைச் சுற்றி உட்கார்ந்து 'பூ, பூ' என்று ஊதின.

அம்மரத்தின் கிளைகளில் பல குருவிகள் கூடு கட்டிச் சுகமாக வாழ்ந்து வந்தன. அவற்றுள் ஒரு சிறு குருவி, அக்குரங்குகளின் மூடச் செயலைக்கண்டு வருந்தி "ஏ குரங்குகளே! நீங்கள் படும்பாடு வீணே. குன்றிமணிகளைத் தீயென நினைக்கும் உங்கள் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது! ஐயோ! உங்களுக்குக் கைகளும் கால்களும் இருந்தும் தங்குவதற்குத் தக்க வீட்டைக் கட்டிக்கொண்டு சுகமாக அதில் வாழாமல் இம்மழையில் இப்படித் தவிக்கின்றீர்களே! இதோ பாருங்கள்! நாங்கள் எங்கள் மூக்கினாலேயே வெகு கஷ்டப்பட்டுக் கூடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அவை எங்களுக்கு இம்மழையில் உதவுகின்றன. நீங்கள் இனியாவது வீடு கட்டிக் கொண்டு சுகமாக வாழுங்கள்" என்று இடித்துக் கூறியது.

இதைக் கேட்ட குரங்குகளுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. ஒரு குரங்கு குருவியைப் பார்த்து "ஏ! அற்பக் குருவி

யே! நீயா எங்களுக்குப் புத்தி புகட்டுவது? உங்களுக்குக் கூட்டைக்கட்டத்தெரியும்; எங்களுக்கு அவற்றை அழிக்கத் தெரியும். இதோ பார்!" என்று சரேலென மரத்தின் மீதேறி அங்குள்ள கூடுகளையெல்லாம் பிய்த்து ஒரு நொடியில் சின்னா பின்னமாக்கிவிட்டது. குருவிகளெல்லாம் தங்கவிடமின்றித் தவித்துத் தத்தளித்தன.

தீயாருக்கு உபதேசித்தல் தீமையை விளைக்கும்.

பாட்டு 6.

குருவியும் குரங்குகளும்.

ஆநந்தக்களிப்பு மெட்டு.

1. மந்திகளொன்றாகக்கூடி—ஓர் நாள்
மாமழை தன்னிலே மெய்மிக வாடி
மாமர மொன்றையே நாடி—மிக்க
மாகுளிர் நீக்கும் வகையினைத் தேடி

2. குன்றி மணிகளைக்கண்டு—மதி
குன்றிய மந்திகள் தீயெனக்கொண்டு
குத்தியே ஊதுதல் கண்டு—அந்தக்
குந்திய குருவிகள் கூட்டத்துள் ஒன்று

3. "சின்னஞ் சிறுவனே நானும்—ஐயே!
நன்னயமாகவே நான் சொல்வதுகேளும்
என்னேரம் ஊதியும் பாரும்—நன்து
வன்னியைக் காணீரே கோரிய நீரும்

4. குன்றிமணியது பாரும்—மதி
குன்றியேபோயதோ உமக்கிது நேரம்!
பெற்றிலோம் கையுடன் காலும்—ஆனாலும்
கற்கோட்டை போலும் எம் கூட்டையே பாரும்"

5. என்றது கேட்ட குரங்கும்—"ஆஹா!
நன்று! நன்று! உந்தன் மதியது போதும்
நன்குன்னால் கூடது ஆகும்—ஆனால்
இன்றென்னாலாயது அழித்தலே ஆகும்

6. நன்றி யுரைக்கவோ வந்தாய்!—வீடு
இன்றி விரட்டிட நானிதோ வந்தேன்
என்று குரங்கும் விரைவாய்—மீது
சென்று கலைத்தது ஒவ்வொரு கூடாய்

7. கண்ட குருவிகளெல்லாம்—நன்கு
தங்கவிடமின்றித் தவித்தன பாவம்
சின்னஞ்சிறுவர்களெல்லாம்—நன்கு
சிந்தித்துப் பாருங்களிக்கதை பதனை

8. கெட்டவருக் குபதேசம்—செய்யின்
நட்டம் நமக்கதில் கிட்டுமே நாசம்
விட்டிடும் மட்டியர் பாசம்—ஆனால்
விட்டிடல் ஆகுமோ மற்றவர் பாசம்.

கதை 7.

சிறுவனும் அரசனும்.

ஒரு ஊரில் அனாதைச்சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் காலை கடைத் தெருவில், கீழே சிந்திக்கிடக்

கும் பொரி கடலையைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். கடைத் தெருவுக்கு எதிரில் அவ்வூர் அரசனின் அரண்மனை இருந்தது.

அரசன் அப்பொழுதுதான் படுக்கையைவிட்டெழுந்து பலகணியின் வழியே எட்டிப்பார்த்தான். சிறுவன் நிலைமையைக் கண்டு பரிதவித்துத் தலையை உள்ளே இழுத்தான். பலகணியிலிருந்த பலகையின் நுனி தலையில் பலமாகத் தாக்கியது. தலையில் காயம்பட்டு இரத்தம் வடிய ஆரம்பித்தது.

அரசனுக்கு உடனே கோபமும் வருத்தமும் உண்டாயின. "ஆஹா! இன்று காலை எழுந்தவுடன் இச்சிறுவன் முகத்தில் விழித்ததாலல்லவா நமக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்தது! ஒவ்வொருநாளும் இவன் முகத்தில் எத்தனையோ பேர் விழிப்பார்களே! நமது குடிகளாகிய அத்தனைபேரும் தினந்தோறும் அவஸ்தைப்படுவார்களே! பலரது துன்பத்திற்குக் காரணமாயிருக்கும் இவ்வொருவனை யொழிப்பது அரசனாகிய நமது கடமையன்றோ?" என்று இவ்வாறு பலபல எண்ணினான். முடிவில் கொலையாளிகளை வரவழைத்து அச்சிறுவனைக் கொன்றுவிடும்படி உத்திரவிட்டான்.

கொலையாளிகள் சிறுவனைப் பிடித்துக் கரகரவென்றிழுத்துச்சென்றனர். வழியில் சிறுவன் தன்னை இட்டுச் செல்லுங் காரணத்தை வினவினான். அவர்களும் விஷயத்தை உரைத்தனர். சிறுவன் உடனே சிறிது தைரியங்கொண்டு அரசனிடம் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவர அவர்களிடம் அனுமதி கேட்டான். அவ்வாறே அனுமதி பெற்று அரசன் முன் சென்றான்.

தன் முன்னே வந்த சிறுவனை அரசர் என்னவென்று விசாரித்தார். சிறுவன் "அரசே! நான் என்ன குற்றம் செய்

தேன்? என்னையேன் கொல்லுகிறீர்கள்?" என்றான். அரசர் "இன்று தூங்கி எழுந்ததும் உன் முகத்தில் விழித்தேன்; அதனால் எனக்கு இத்தகைய பலத்த காயம் தலையில் ஏற்பட்டது. உன் முகத்தில் விழிக்கும் பலரும் இதே கஷ்டத்தையடையாமலிருக்கும் பொருட்டே உன்னைக் கொல்ல உத்திரவிட்டேன்" என்றார். இதை கேட்ட சிறுவன் "அரசே! தாங்கள் என் முகத்தில் விழித்ததனால் தங்களுக்குத் தலையில் காயம் மாத்திரம் ஏற்பட்டது. ஆனால் தங்கள் முகத்தில் இன்று காலை விழித்த எனக்குத் தலையையே இழக்கும்படி நேரிட்டிருக்கிறதே! இவ்விரண்டிற்குள் எது மேலானது? என்று பணிவாகக் கேட்டான்.

சிறுவனது சொல்லைக்கேட்ட அரசன் உண்மை உணர்ந்தான். சிறுவனது அறிவுக்கு மெச்சினான். அவனது உயிரைத் திரும்பவும் அளித்தான். வெகுமதியும் பல அளித்தான்.

விதியை மதியால் வெல்லலாம்.

பாட்டு 7.

சிறுவனும் அரசனும்.

'வீரன் இருளன் காட்டேரி' என்ற மெட்டு.

1. சிறுவன் ஒருவன் சிறுவயதில்
அருமைத் தந்தை தாயிழந்து
வறுமைப் பிணியால் மிகவாடி
இருக்கக் குடிலும் இலனாகி

2. தெருவில் திரிந்து திண்டாடி
சரியாய் உணவும் உண்ணுனுய்
தனித்தொரு காலைக் கடைத்தெருவில்
துனிந்து பொறுக்கப் பொரிகடலை

3. எவ்வுயிர் களுக்கும் இதமளிக்கும்
அவ்வூர் அரசன் அவ்வேளை
பொழுது புலர்ந்ததைப் பார்த்ததுமே
பலகணி வழியே தலைநீட்ட

4. பாலனைக் கண்டு மனமிளகி
சாலவும் நொந்து தலைநிமிரப்
பலகணி பாலுள்ள பலகையொன்று
பலமாய்த் தாக்கவே தலைமீது

5. "காலையில் கண்விழித் தெழுந்தவுடன்
பாலனைப் பார்த்ததன் பலனிதுவோ ?
காலனைப்போ லன்றே காணுகிறன்
சால உயிர்க்குப் பகை யிவனே

6. ஆகவே இவனுயிர் வாங்கிடவே
வேகமே வீரரை ஏவிடுவேன்
என்றவன் வீரரை வாவழைத்து
சென்றுமே சிறுவனைக் கொன்றிடுவீர்"

7. என்றவுடன் வந்த வீரர்களும்
நன்றென்று சிறுவனின் கரம்பிடித்து
காகா வென்றிழுத் தோடப்பாலன்
பாபரப் புடனே வினவலுற்றன்

8. "குற்ற மறியாத குழவியென்னை
கொற்றவன் வீரர்நீர் கொண்டுசெல்லக்
காரணம் நீவிரும் கூறுவிரோ
கோரினே னும்மது கருணைதன்னை"

9. என்றதும் வீரரும் மனமிளகி
நின்றா சன்சினந் தனையுரைக்க
சிறுவன் இறைவனைப் பார்த்துவர
இறைஞ்சவே அவர்களும் இடங்கொடுக்க

10. சிறுவனும் அரசன்முன் சென்றுநின்று
பெரிதுமே தைரியம் மனதிற்கொண்டு
"ஐயனே! யான் செய்த குற்றமென்ன?
மெய்யனே! என்னையேன் கொல்லலுற்றீர்!"

11. பாலன் வினவைக் கேட்டரசன்
"காலையுன் முகங்காணக் காயம்பட்டேன்
ஆருயிர் மக்களைக் காப்பாற்ற
ஓருயிர் தன்னையே ஒழிக்கலுற்றேன்"

12. என்றது கேட்டதும் சிறுவன் சொல்வான்
"இன்றுகண் விழித்ததும் எனைக்காணக்
காயமடைந்தீர் அரசே நீர்
காய மிழக்கவோ உம்மைக்கண்டேன்!

13. சிறுவன் மொழியது செவியேற
அரசன் மனமது மிகக்கனிந்து
"அறிந்தே னுண்மையை சிறுபாலா
பெறுவாய்நின் னுயிர் வெகுமதியும்".

14. என உரைத்தானென முடியுமிந்த
நனிமிகு கதையிதை நவிலக்கேட்டு
விதியைவெல்ல மதியதுவே
கதியெனக்கொண்டே இதம்பெறுவீர்.

கதை 8.

ஔவையும் சிறுவனும்

ஔவை யென்பவள் தமிழ் நன்றாகப் படித்த ஒரு கிழவி. ஒரு சமயம் படிப்பினால் அவளுக்குக் கொஞ்சம் கர்வம் இருந்தது. அவளுக்கு ஸுப்ரம்ஹண்ய ஸ்வாமி குலதெய்வம். அவர் இதை யறிந்தார். அவளது கர்வத்தை யழித்து அவளை நல்வழிப்படுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டார்.

ஒருநாள் ஔவை வெயிலில் அதிக தூரம் நடக்க நேர்ந்தது. வழியில் மிக்க களைப்படைந்தாள். அங்கொரு நாவல் மரமிருந்தது. அதனடியில் சென்று தங்கினாள். மேலே பார்த்தாள். ஒரு பையன் பழம் பறித்துத் தின்றுகொண்டிருந்தான். "அப்பா! எனக்குச் சில பழங்கள் பறித்துப் போடுவாயா?" என்று கேட்டாள்.

ஸுப்ரம்ஹண்ய ஸ்வாமியே அங்குப் பையனாக வந்திருந்தவர். கிழவி பழங்கள் கேட்டதற்குப் "பாட்டி! உனக்குச் சுடும் பழம் வேண்டுமோ, சுடாப் பழம் வேண்டுமோ" என்று கேட்டார். பழங்களில் அப்படி வித்தியாசம் இருக்குமா! என்று ஔவை ஆச்சரியப்பட்டாள். "அப்பா! தாகமாயிருக்கிறது. சுடாப் பழமே போடு" என்றாள். பையன் கிளைகளை உலுக்கினான். பழங்கள் கீழே மணல் தரையில் விழுந்தன. பாட்டி நன்றாகக் கனிந்த பழங்களாகப் பொறுக்கினாள். அவற்றின் மேல் படிந்துள்ள மணல்போக ஊதினாள். மேலிருந்த பையன் "பாட்டி! சுடாப் பழம் கேட்டாயே; சுடும் பழத்தை எடுத்து ஊதுகிறாயே!" என்றான். ஔவை சுடும் பழமென்றால் நன்றாய்க் கனிந்த பழமென்றும், சுடாப் பழமென்றால் காய் என்றும் நாம் அறியாமற் போனோமே! என்று வெட்கமடைந்து தலைகுனிந்தாள்.

உடனே சிறுவன் ஸுப்ரம்மண்ய ஸ்வாமியாக மாறி ஔவைக்குத் தரிசனம் கொடுத்தான். ஔவையும் அவரைத் துதித்துப் பல பாடல்கள் பாடினுள். பின்பு ஸ்வாமியும் மறைந்தார்.

கர்வம் அறிவைக் குறைக்கும்.

பாட்டு 8.

ஔவையும் சிறுவனும்.

'பாண்டவர்க ளாண்டுவந்த பாரதபூமி' என்ற மெட்டு.

1. அறிவிலே சிறந்த ஒரு ஸரஸ்வதியேபோல்
ஔவை யென்ற ஓர் கிழவி வழி நடந்ததால்

2. களைமிகுந்து நடைமெலிந்து கண் குழிந்திட
கிளைகள்தோறும் கனிதுலுங்கிக் கண் குளிர்ந்திட

3. கருநாவல் மாநிழலைக் கண்டு சென்று
திருநாவுக் கொருகனியும் உண்டோவென்று

4. தலைநிமிரக் கிளைநடுவிற் கண்டாளங்கு
இலை மறைவிற் பிறைமதிபோற் பாலன் தங்க

5. "பழம் பறித்துத் தின்னும் பாலா பாராயிங்கு
பசியைப் போக்கச் சில பழங்கள் போடாய் நன்கு"

6. எனக்கேட்டதும் சிறுவன்மிகக் களிப்புடன் சொல்வான்
"உனக்கேற்றவை சுடும் பழமோ சுடாப்பழம்தானே?"

7. என வினவக் கிழவி மனம் குழப்பங்கொண்டு
"கனிவகையிற் புதுமையிதைக் கண்டேனின்று

8. சுடாப்பழமே போடாய் பாலா சோகந்த்ர
சுடும்பழமேன் மேலும்மேலும் சூடேசோ ”

9. எனலுமவன் கனி துலுங்கும் கிளையுலுக்கிட
மணலில் விழும் பழமதனுள் மணல் புகுந்திட

10. கனியிலுள்ள மணலைப்போக்கக் கிழவி எண்ணிக்
கனமாய் ஊதச் சிறுவன்கேலி செய்ய நண்ணிச்

11. “சுடாப்பழமே போடாய் என்ற பாட்டி நீ ஏன்
சுடும்பழத்தைப் பார்த்தெடுத்து ஊதுகின்றாய்?

12. என வினவக் “கனியதனைச் சுடும்பழமென்றும்
கனியாத காயதனைச் சுடாப்பழ மென்றும்

13. இன்புறிய வந்துதித்த கந்தா மைந்தா!
இன்பகன்ற தென்னகந்தை நின்றருள்வாயே ”

14. என்று ஔவை பன்முறையும் நன்கு போற்றினாள்
என்ற இந்தக் கதையால்நாமும் அகந்தை நீக்குவோம்.

கதை 9.

வணிகனும் திருடனும்

ஒரு பட்டணத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் வியாபாரத்தால் மிகுந்த பணம் சேர்த்தான். பெரிய மாளிகை ஒன்று கட்டி அதில் வசித்து வந்தான். மாளிகையின் பின் புறம் ஒரு தோட்டமுண்டு. அதில் ஒரு அவரைப்பந்தல் போட்டிருந்தான்.

ஒருநாள் முன்னிரவிலேயே ஒரு திருடன் வந்து அந்தப் பந்தலில் மறைந்திருந்தான். வணிகன் இரவில் சாப்பிட்டு

விட்டுத் தோட்டத்தில் கை கழுவப் போனான். பந்தலின் கீழ் இருந்த திருடனைப் பார்த்தான். ஆனால் பார்க்காதவன்போல் பாசாங்கு செய்தான். அவனைத் தந்திரமாகத் துரத்தும் வழியை யோசித்தான். மனைவியை நீர் கொணரச் செய்து அந்த ஜலத்தை வாயில் ஊற்றிக் கீழேயும், முன்னே நிற்கும் திருடன் மேலேயும் பல தடவை யுமிழ்ந்தான். பின்னும் ஜலம் கொண்டு வரச் சொன்னான். எண்ணிறந்த தடவை அத்திருடன் மேல் ஜலத்தை உமிழ்ந்தான். வணிகன் மனைவி வந்து பார்த்தாள். "நீங்கள் ஏன் இபபடி ஜலத்தைச் சும்மா வாயில் ஊற்றிக் கொப்பளித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்றாள். வணிகன் உடனே தன் மனைவி மேலும் நீரை உமிழ ஆரம்பித்தான். அவள் தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று எண்ணி ஓடி அண்டை அயலாரை அழைத்து வந்தாள்.

அவர்கள் வந்ததும் வணிகனைப் பார்த்து "நீ ஏன் இப்படி ஜலத்தை வாயில் ஊற்றி உமிழ்ந்துகொண்டே இருக்கிறாய்? உன் மனைவி மேலும் ஏன் உமிழ்ந்தாய்?" என்றார்கள். அதற்கு வணிகன் "ஐயா! நான் ஒரு தடவை என் மனைவிமேல் ஜலம் உமிழ்ந்ததற்காக உங்களை யெல்லாம் அழைத்துவந்து இவ்வளவு தடபுடல் செய்கிறாளே! இதோ பந்தலின் கீழ் இருக்கும் புண்ணியவானைப் பாருங்கள்! இவர் மேல் ஒரு ஆயிரம் தடவை உமிழ்ந்திருப்பேன். இவர் எவ்வளவு பொறுமையாக எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு பரம சாதுவாய் நிற்கிறார்!" என்று பதிலளித்தான்.

வந்தவர்கள் உடனே பந்தலில் விளக்குடன் போய்ப் பார்த்துத் திருடனைக் கண்டுபிடித்தார்கள். அவனை நன்றாயடித்துப் புத்தி புகட்டி விரட்டிவிட்டார்கள். வணிகன் திருடனைத் துரத்தச் செய்த தந்திரத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

தந்திர மதுநன் மந்திர மாகும்.

பாட்டு 9.

வணிகனும் திருடனும்.

'போன்னூர் மேனியனே' என்ற மெட்டு.

1. வணிகர் குலக்கொழுந்தாய்—நல்ல
வாணிபஞ் செய்துகொண்டு
தனியே ஓர் மாளிகையில்—ஒரு
வணிகன் வசித்துவந்தான்

2. அந்த மாளிகையின்பின்—ஒரு
அந்தம் மிகுந்த தோட்டம்
அந்தத் தோட்டத்தினிலே—அவரை
பந்தலொன் றங்குண்டே

3. ஒருநாள் முன்னிரவில்—ஓர் கள்வன்
ஒருவரும் அறியாமல்
இருளிலே பந்தலின்கீழ்—வந்து
ஒருவனும் மறைந்து நின்றான்

4. அப்போது வணிகன்—மனம்
திருப்தியாய் உண்டபின் வாய்
கொப்புளிக்க வந்தவன்—பந்தல்
மூற்புறத்திலே நின்றான்

5. அதுபோது கள்வனங்கு—நன்கு
பதுங்கி நிற்பதைக்கண்டே
ஏதும் அறியாதுபோல்—வணிகன்
சாதுவாய் நின்றிருந்து

6. தன்மனை நீர்கொணர—தனிகன்
அந்நீரை வாயில் ஊற்றித்
தன்முன்னே நிற்பவன்மேல்—அவன்
பன்முறை பார்த்துமிழ்ந்தான்

7. பின்னரும் வரவழைத்து—அவன்
அந்நீரையும் உமிழ
என்னவென்றறியச்சென்ற—மனைவி
சென்னிமேலும் உமிழ்ந்தான்

8. கொண்டவன் செயலைக்கண்டு—அவனைக்.
கொண்டுமே பித்தனென்று
அண்டை அயலாரை—அவள்
சென்று அழைத்துவந்தாள்

9. அயலாரும் வந்தவுடன்—வணிகன்
செயலதைக் கண்டிக்க
முயல்வதைக் கண்டவுடன்—மிக்க
வியப்பா யுரைக்கலுற்றன்

10. வாரீர் சோதரரே—வந்து
பாரீரிந்த விந்தையைக்
காரியொருதரமே—இந்தக்
காரிகை மேலுமிழ்ந்தேன்

11. எண்ணிறந்த தடவை—இந்தப்
புண்ணியன் மேலுமிழ
கன்னியிவளைப்போல—என்னை
எண்ணி ஒன்றும் ஏசான்

12. என்றதும் வந்தவர்கள்—அங்கு
நின்ற கள்வனைக் கண்டு
சென்றிடு வந்தவிடம்—என்று
நன்கு புடைத்துவிட்டார்

13. தந்திரந்தான் பெரிது—என்ற
மந்திரத்தைக்கொண்டு
எந்த எதிரியையும்—வென்று
எங்கும் ஜயம்பெறுவீர்.

கதை 10.

சிறுவனும் கிழவனும்.

ஒரு ஊரில் வயது சென்ற ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவன் ஒருநாள் காலையில் தோட்டத்தில் ஒரு மாஞ் செடியை நட்டுக்கொண்டிருந்தான்.

அவ்வழியே ஒரு சிறுவன் வந்தான். கிழவன் கஷ்டப்பட்டு உழைப்பதைப் பார்த்தான். "கிழவா! உனக்குக் கிட்டத்தட்ட எண்பது வயதுக்கு மேலிருக்கும் போலிருக்கிறதே! நீ யேன் இப்பொழுது இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த மாங்கன்றை நடுகிறாய்? இக்கன்று மாமாகிப் பழம் தரும் வரையில் நீ உயிருடன் இருப்பாய் என்பது என்ன நிச்சயம்? வீணாக என் வயது சென்ற காலத்தில் நீ இப்படிக் கஷ்டப்பட வேண்டும்" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டான்.

இதைக் கேட்ட கிழவன் குழந்தாய்! நீ கேட்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அதோ பார்த்தாயா! பெரிய மரங்கள் இருக்கின்றன. அவைகள் என் பாட்டனாலும், தந்தையாலும் வைக்கப்பட்டவை. நான் அவற்றின் பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன். அதுபோல், நான் இப்பொழுது கஷ்டப்பட்டுப் பயிராக்கும் இந்த மாங்கன்றும், மற்றச் செடிகளும் எனக்காக மட்டும் அல்ல. எனக்குப் பிறகு என் பிள்ளைகளும் பேரன் முதலியவர்களும் அனுபவிப்பதற்காகவுந்தான்.

ஆகவே குழந்தாய்! உலகிலுள்ளோர் யாவரும் சுயநலம் கருதாமல் பிறருக்கு உதவி செய்வதற்காகவே பிறந்தோமென்று எண்ணித் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்து வர வேண்டும்" என்றான். இதைக் கேட்ட சிறுவன், தான்

தவருக நினைத்ததற்காக வெட்கித் தலை குனிந்தான். கிழவன் புத்திமதி கூறியதற்காக அவனை வணங்கி விடை பெற்றுச் சென்ருன்.

பிறர்பொருட்டு உழைப்பதே பேரின்பம்.

பாட்டு 10.

கிழவனும் சிறுவனும்.

'பித்தா பிறை சூடீ' என்ற மெட்டு.

1. கனிகள் தரும் மாங்கள் சில வளர்ந்த சிறு தோட்டம்
தனிலே ஒரு கிழவன் சிறு செடியைநடு கையிலே
2. வழியே வந்த சிறுவன் அதை வியப்பாய் நின்று பார்த்துக்
''கிழவா! உன்றன் விதியோ, நீயும் உழைத்தல் நல்ல மதியோ
3. கிட்டத்தட்ட எட்டுப்பத்து வயதுசென்ற நீயும்
கஷ்டப்பட்டு நட்ட இந்தச் செடியும் தரும் கனிகள்
4. என்று மெத்த ஆசைகொளல் நன்றே? உரைத் திடுவாய்''
என்றதனைக் கேட்ட முதி யோனும் விடை யிறுத்தான்
5. "குழந்தாய் நீயும் மொழிதல் வெகு விந்தையதே பாராய்
அழகாயெந்தன் தந்தை வைத்த தருக்கள் வெகு சீராய்
6. அவைதம் நிழலிருந்து பழம் புசித்துப் பலர்க்கீந்தேன்
அவர்போலவே யானும் பிறர்பொருட்டேயிதை வளர்ப்பேன்"
7. எனக்கூறிய முதியோனுரை கேட்டுநின்ற சிறுவன்
தனக்குற்றதோ ரவமானத்தால் தலைவணங்கியே சென்றன்
8. சிறுவீர் இந்தச் சிறு கதையால் நாம் பிறர்க்கே உழைக்கப்
பிறந்தோமென அறிந்தே இதம் பெறுவீர் அறமியற்றி.

ஏசுநாதர் துதி.

‘ கல்லார்க்கும் கற்றவர்க்கும் , என்ற மெட்டு.

1. கர்த்தரை நாம் கருத்தில்கொண்டு கோரித்துதி செய்தால்
விர்த்திபெற வன்புடனே வந்துதவி செய்வார்

2. பாலர்கள்நாம் பாவபுண்யம் பாரிலொன்றும் அறியோம்
சீலர்யேசு நாதர்சேவை செய்வதொன்றே அறிவோம்

3. அன்னை தந்தை பின்னை குரு தெய்வம் பிறசுற்றம்
அன்னவரே ஆவார் என்றும் அன்புடையார் மற்றும்

4. அன்பே உருவாக வந்த அன்னவரை யெண்ணி
சின்னஞ்சிறு வர்கள் நாமும் செய்வோம் துதி நண்ணி.

முகம்மது நபியவர்கள் துதி.

‘ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே’ என்ற மெட்டு.

1. இந்தியாவி லின்று லாவும் நன் மதங்கள் மூன்றில்
அந்தமாம் முகம்மதீய மென்ற மதமொன்று

2. அம்மதம் விளங்குமாறு வந்துதித்த பெரியார்
தம்மனங் களிக்குமாறு ஆண்டவனைச் சிறியோம்

3. நாம் பலரும் தாள்பணிந்து போற்றியே விரைவில்
ஆங்கலைக ளோதப்பயன் கூட்டுவான் இறைவன்

4. முகம்மது நபிபிறந்த மெக்காவெனும் க்ஷேத்ரம்
சுகம்பெறவே மேந்துநோக்கித் தொழுவதற்கோர் பாத்ரம்

5. நன்மைமிகும் நபியவர்தம் நன்மொழிகள் கேட்டே
மன்னுயிர்பா லன்புகொண்டு வாழ்வோம் இந்த நாட்டே.

Copies can be had of :—

THE AUTHOR

V. RAMUDOO IYER,

No. 18, Vanniadi Street, Rock Fort South,

TEPPAKULAM, TRICHINOPOLY.